Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

16.4.2024

**ஊடக வெளியீடு**

**IR. PATHMANATHAN K.**
தலைமை நிர்வாக அதிகாரி
PBA ஹொல்டிங் பெர்ஹாட் மற்றும் PBAPP.

**AIDAP 2024: கடந்த 70 நாட்களில் ஆயர் ஈத்தாம் அணையின் செயல்திறன் கொள்ளளவு 2.5% குறைந்துள்ளது**

- **5.2.2024 அன்று, ஆயர் ஈத்தாம் அணையின் செயல்திறன் கொள்ளளவு 32.8% ஆக இருந்தது.அதேவேளையில், 15.4.2024 அன்று அந்த அணையின் செயல்திறன் கொள்ளளவு 30.3% ஆக இருந்தது.**

பினாங்கு, செவ்வாய், 16.4.2024: ஆயர் ஈத்தாம் அணை செயல்திட்டம் 2024 (AIDAP 2024)-ஐ செயல்படுத்துவதன் மூலம், பிப்ரவரி 2024 முதல் PBAPP ஆயர் ஈத்தாம் அணையில் இருந்து தினசரி சராசரி மூலநீர் எடுப்பதை கணிசமாகக் குறைத்துள்ளது.

பின்வரும் அட்டவணை AIDAP 2024 திட்டத்தின் முக்கிய கருத்து மற்றும் செயல்பாட்டினை மீண்டும் வலியுறுத்துகிறது:

<table>
<tr><td colspan="3">ஆயர் ஈத்தாம் அணை</td></tr>
<tr><td colspan="2">நீர் இழுப்பு வகைகள்</td><td>ஒரு நாளைக்கு மில்லியன் லிட்டர்(MLD)</td></tr>
<tr><td>அ.</td><td>இயல்பான சராசரி (வறண்ட வானிலை)</td><td>44</td></tr>
<tr><td>ஆ.</td><td>வறண்ட வானிலை கட்டுப்பாடுகள்</td><td>22</td></tr>
<tr><td>இ.</td><td>AIDAP 2024</td><td>11</td></tr>
<tr><td colspan="3">PBAPP சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து (WTP) நீரை 'பம்ப்' செய்து ஆயர் ஈத்தாம் சேவை பகுதிக்கு விநியோகம் செய்கிறது. இதன் மூலம், ஆயர் ஈத்தாம் அணையில் ஏற்படும் தினசரி 33 MLD பற்றாக்குறையை "நிவர்த்தி" செய்கிறது.</td></tr>
</table>

AIDAP 2024 திட்டம் 5.2.2024 முதல் செயல்படுத்தப்பட்டது, அப்போது ஆயர் ஈத்தாம் அணையின் கொள்ளளவு 32.8% ஆக இருந்தது. நேற்று, அந்த அணையின் செயல்திறன் கொள்ளளவு 30.3% ஆக பதிவு செய்யப்பட்டது.

இந்தத் தரவுகள் மற்றும் புள்ளிவிவரங்கள் AIDAP 2024 இன் தற்போதைய முடிவுகளைப் பிரதிபலிக்கின்றன:

| | | |
|---|---|---|
| 1. | AIDAP 2024 காலவரையறை (இன்று வரை) | 70 நாட்கள் |
| 2. | ஆயர் ஈத்தாம் நீர்ப் பிடிப்பு பகுதியில் (WCA) பெறப்படும் மழைப் பொழிவு | 70 நாட்களில் 138மிமீ (குறைந்தது) |
| 3. | ஆயர் ஈத்தாம் அணையின் செயல்திறன் கொள்ளளவு விழுக்காட்டில் சரிவு | 2.5% |
| 4. | AIDAP 2024 திட்டம் 2024 பண்டிகை காலங்களில் செயல்படுத்தப்பட்டது (நீர்ப் பயன்பாட்டுக்கான உச்ச நேரம்) | • சீனப் புத்தாண்டு<br>• நோன்புப் பெருநாள் |

ஆயர் ஈத்தாம் அணையின் கொள்ளவு 70 நாட்களில் 2.5% குறைந்துள்ளதாக முடிவுகள் காட்டுகின்றன (சராசரி: ஒரு நாளைக்கு 0.036%). இந்தக் காலக்கட்டத்தில், பினாங்கு வெப்பமாகவும் வறண்ட வானிலையாகவும் இருந்த வேளையில் 2 முக்கிய பண்டிகைகளைக் கொண்டாடியது.

**விளக்கம் 1: 30.3% செயல்திறன் கொள்ளளவு கொண்டிருந்தால் "30 நாட்களுக்கு விநியோகம்" செய்ய முடியும் என்று அர்த்தமல்ல**

"ஆயர் ஈத்தாம் அணையில் 30.3% செயல்திறன் கொள்ளளவு என்பது அந்த அணையில் இருந்து 30 நாட்களுக்கு நீர் விநியோகம்" செய்ய முடியும் என்று ஊகிக்கப்படுகிறது. இது தவறாக ஊகிக்கப்படும் மதிப்பீடாகும், ஏனெனில்:

- இதில் முக்கியமான தகுதி உள்ளது: "மழை மொழியவில்லை". ஆயர் ஈத்தாம் WCA இல் மழை பொழியும் போது, "நாட்களின் எண்ணிக்கை" மாறும்.

இது வறண்ட பருவநிலையில் 22 MLD நீர் இழுப்புகளை அடிப்படையாகக் கொண்டது. இன்று, PBAPP, AIDAP 2024ஐ 11 MLD நீர் இழுப்புச் செயல்படுத்துகிறது.

- நீண்ட காலத்திற்கு அணையின் மீதமுள்ள இருப்புகளை பாதுகாக்க AIDAP திட்டத்தின் மூலம் நீர் விநியோக கட்டுப்பாடுகளை கட்டுப்படுத்த PBAPP இணக்கம் கொண்டுள்ளது. இருப்பினும், இதுபோன்ற கட்டுப்பாடுகளை செயல்படுத்துவதன் மூலம் ஆயர் ஈத்தாம் சேவை பகுதியில் உள்ள சில பயனீட்டாளர்களுக்கு சில சிரமங்களை ஏற்படுத்தலாம்.

**விளக்கம் 2: ஆயர் ஈத்தாம் “எச்சரிக்கை அறிவிப்பு” 1.1.2024 அன்று தொடங்கியது**

ஆயர் ஈத்தாம் அணையைப் பொறுத்த வரை, PBAPP 1.1.2024 முதல் "எச்சரிக்கை அறிவிப்பு" செயல்படுத்தி வருகிறது. இந்த ஆண்டின் தொடக்கத்தில், அணையின் செயல்திறன் கொள்ளளவு 100% அல்ல, 68.9% ஆக இருந்தது.

2024 ஜனவரி முதல் மழைக்காலம் வரும் வரை இந்த அணையில் இருந்து நீர் இழுப்பு செயல்முறைகள் கவனமாக நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதை PBAPP அறிந்திருந்தது. 5.2.2024 அன்று, பினாங்கில் முழு எல் நினோ பருவநிலை மாற்றம் தொடங்கியவுடன், அணையின் திறன் 32.8% ஆகக் குறைந்தபோது, அதன் தற்செயல் நடவடிக்கையாக AIDAP 2024 திட்டத்தை PBAPP செயல்படுத்தியது.

ஏப்ரல் 2024 நடுப்பகுதியில், ஆயர் ஈத்தாம் அணையின் செயல்திறன் கொள்ளளவு 30.3% ஆக குறைந்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. இருப்பினும், AIDAP 2024 திட்டத்தின் மூலம் PBAPP அதன் மீதமுள்ள இருப்புக்களை இன்னும் தீவிரமாக பாதுகாத்து வருகிறது.

**விளக்கம் 3: "30.3% செயல்திறன் கொள்ளளவு" என்பது பதற்ற நிலையை ஏற்படுத்துவதற்கான ஒரு காரணம் அல்ல**

கடந்த 70 நாட்களில் AIDAP 2024 திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் பெறப்பட்ட அதன் முடிவுகள், 30.3% அணை செயல்திறன் கொள்ளளவு

ஆனது பதற்ற நிலைக்கு ஒரு காரணம் அல்ல என்பதை ஆயர் ஈத்தாமில் உள்ள நீர் பயனீட்டாளர்களுக்கு உறுதியளிக்க வேண்டும்.

இந்த வெப்பம் மற்றும் வறட்சி காலம் எவ்வளவு நாட்களுக்கு நீடிக்கும் என்று PBAPPக்குத் தெரியாது. எனினும்:

- ஆயர் ஈத்தாம் பகுதியில் நீர் விநியோக சேவைகள் இன்னும் இயல்பான நிலையில் உள்ளன.
- அனைத்துலக வானிலை அறிக்கைகளின்படி, வெப்பமான மற்றும் வறண்ட எல் நினோ பருவ மாற்றத்தில் இருந்து ஈரமான மற்றும் மழை பருவமான La Niña விரைவில் ஏற்படும்.
- பினாங்கில் 2024 ஏப்ரல் - ஜூலை காலக்கெடுவில் அதிக மழை பெய்யும் என்று METMalaysia கணித்துள்ளது.

பினாங்கில் எங்களிடம் போதுமான நீர் இருப்பதை உறுதிசெய்ய, நீர் பயனீட்டாளர்கள் (குறிப்பாக ஆயர் ஈத்தாம் பயனீட்டாளர்கள்) 2024 ஏப்ரல், மே மற்றும் ஜூன் வரை நீர்ப் பயன்பாட்டை 10% குறைக்க வேண்டும்.

உள்நாட்டு நீர் சேமிப்பு குறிப்புகளுக்கு, தயவுசெய்து www.pba.com.my அகப்பக்கத்தைப் பார்வையிடவும்:

நன்றி

---

எழுத்தாக்கம் : Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
Corporate Communications Unit
மின்னஞ்சல் : syarifah@pba.com.my